வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு. A. கந்தகுமார். எம்.எல்.,

மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ), மயிலாடுதுறை,

அமர்வு வழக்கு எண் 52/2023

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 9 | நாள் | 01.08.2023 |
| பெயர் | சமரசபாண்டியன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் பெரம்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி 2018 ல் ஓய்வுபெற்றுள்ளேன். சம்பவத்தின் போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில தலைமை காவலராக பணியாற்றினேன். கடந்த 13.03.2003 ம் தேதி மயிலாடுதுறை காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது மயிலாடுதுறையில் நடந்த ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டத்திற்கு பாதுகாபப்பு அலுவலராக நியமிக்கப்பட்டேன். என்னுடன் மயிலாடுதுறைஆய்வாளர் திரு.மேகனவேல், பாலையூர் ஆய்வாளர் அமிர்தகுமார் மற்றும் காவலர்கள் சகிதம் மயிலாடுதுறை மேம்பாலத்திற்கு கீழ் பாதுகாப்பு பணியில் இருந்தேன். அப்போது ஊர்வலம் சுமார் 7.00 மணியளவில் ஊர்வலத்தின் முன் பகுதியில் பாதுகாப்பு பணிசெய்தோம். மயிலாடுதுறை செம்மங்குளம் அருகே சென்றபோது ஊர்வலம் நம்பர் 1 ரோட்டில் செல்லவேண்டும் ஆனால் அவர்கள் நம்பர் 2 ரோட்டில் செல்ல முயன்றார்கள் அப்போது ஆய்வாளர்கள் தடுத்து நிறுத்தினார்கள். அப்போது ஊர்வலத்தில் வந்த மாவட்ட பொறுப்பாளர் ஈழவளவன் மற்றும் அந்த அமைப்பை சேர்ந்த சிலர் இவர்களுக்கு இதே வேலையாக போச்சி என்று மதவாத தடை சட்டத்தை எதிர்த்தும் கோஷம் போட்டவர்கள் எங்களை கண்ணாபின்னா என்று திட்டியும் கற்கள் மற்றும் கட்டையால் எங்களை தாக்கினார்கள் அதில் எனக்கு வலது கண் கீழ், தலையிலும் காயம் ஏற்பட்டது. மற்றும் ஊர்வலத்தில் வந்தவர்கள் அங்கிருந்த இரண்டு அரசு பேருந்துகளின் கண்ணாடிகளை உடைத்துவிட்டு சென்றுவிட்டார்கள். என்னை தலைமை காவலர்

காத்தலிங்கம் என்பவர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார் மேலும் என்னை மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் செல்ல சொன்னார்கள் நான் செல்ல விருப்பம் இல்லாத காரணத்தினால் இங்கேயே சிகிச்சை எடுத்துகொண்டேன். 14.03.2003ம் தேதி பெரம்பூர் ஆய்வாளர் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் விசாரிக்க நடந்த விவரம் சொன்னேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அன்றை தினம் நான் பாதுக்காப்பு பணியில் இருந்தேன் என்று காட்டுவதற்கு பொதுநாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது (Duty pass) ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் பொதுநாட்குறிப்பை காண்பித்தேன் ஆய்வாளர் அதனை பார்வையிட்டார். நான் மருத்துவரிடம் அடையாளம் தெரியாத நபர்கள் என்னை தாக்கியதாக சொன்னேன் என்றால் சரிதான். காவலர்களை தரைகுறைவாக திட்டியதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை எத்தனை மணிக்கு பணிக்கு அனுப்பிவைத்தார்கள் என்ற விவரம் சொன்னேனா என்றால் என்னை 3 மணிக்கு அனுப்பி வைத்தார்கள் என்று சொன்னேன். நான் சொல்வதுபோல் 3 மணிக்கு மேம்பாலத்தின் அருகிலோ செம்மங்குளம் நம்பர் 2 ரோடு அருகில் சாலை பாதுகாப்பு பணியில் இல்லை என்றால் சரியல்ல. ஊர்வலத்தில் சென்றவர்கள் நம்பர் 2 ரோடு வழியாக செல்வதற்கு பிரச்சனை செய்தார்கள் என்று வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதுபோல கூட்டத்தில் இருந்தவர்கள் எங்களை கற்களாலும், கட்டையாலும் தாக்கினார்கள் என்று வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அனுமதிக்கப்பட்ட சாலையில் ஊர்வலம் சென்று எந்தவித பிரச்சனையும் இல்லாமல் பொதுக்கூட்டம் நடைபெற்றது என்றால் சரியல்ல. அன்றைய தினம் இரவு 7 மணிக்கு பொதுக்கூட்டம் நடந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அன்றைய தினம் ஊர்வலம் முடிந்து இரவு 7 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ஊர்வலத்தில் சொன்ன இடத்தில் தாக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் உயர் அதிகாரியின் அறிவுறுத்தல் படி தானாகவே ஏற்படுத்திக்கொண்டது என்று சொன்னால் சரியல்ல. விடுதலை சிறுத்தை கட்சி மதமாற்ற தடைச்சட்டத்திற்கு எதிராக தமிழகம் முழுவதும் எங்கும் பொது கூட்டம் நடைபெறக்கூடாது என்பதற்காக பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ நடந்த இடத்தில் நான் இல்லை என்பதால் தான் முதல் விசாரணையிலும் ஆய்வாளர் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.